# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

13.08.2020 வியாழக்கிழமை


## புதினம்? தெரியுமோ

மாற்றம் ஒன்றுதான் மாறாதது. விக்கியரில அந்த மாற்றம் நல்லாவே தெரியுது. அவர் மாகாண சபைக்கு வரேக்க, அவர் பற்றி கன பேருக்கு நல்ல அபிப்பிராயம் இருக்கேலை. ஆனால் வடமாரட்சியில அவர் மாவீரன் பிரபாகரன் எண்டு பேசின பிறகு சனத்துக்கு கொஞ்சம் நம்பிக்கை வந்து, அவரை முதலமைச்சர் ஆசனத்தி னலையும் சனம் இருத்திச்சு. ஆனால் எலக்சனில வெண்ட உடன ஒருத்தருக்கும் சொல் லாமல் கொள்ளாமல் ஆள் ஓடிப் போய், மஹிந்த வுக்கு முன்னால சத்தி

2

## புதிய அரசின் முதலாவது அமைச்சரவை 19ஆம் திகதி

கொழும்பு, ஓக. 13
சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான புதிய அரசின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

2

# ஹிட்லரை போன்று மாறுவார் கோத்தாபய

## ஆரூடம் வெளியிட்டார் விக்னேஸ்வரன்

முள்ளிவாய்க்கால், ஓகஸ்ட் 13
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, ஹிட்லரைப் போன்று விரைவில் சர்வாதிகாரியாக மாறுவார் என்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் சார்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளவருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

2



## கன்சைட் கடற்படை தளத்தில் சித்திரவதை நடக்கவில்லை

### முகாம் தளபதி சாட்சியம்

கொழும்பு, ஓக. 13
திருகோணமலை கடற்படைத் தளத்தில் உள்ள கன்சைட் என்ற இடம் சித்திரவதைகளுக்காகப் பயன்படுத்தப்படவில்லை என்று அந்த முகாமின் தளபதி சுமித் ரணசிங்க தெரிவித்துள்ளார். அதேவேளை புலனாய்வு நடவடிக்கைகளுக்காகவே பயன்படுத்தப்பட்டது எனவும் குறிப்பிட்டுள்ளார்.
அரசியல் பழிவாங்கல்கள் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்பாக சாட்சியமளிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.
திருகோணமலை கடற்படைத்

2

## நெல்லியடியில் 8 கடைகளுக்கு 'சீல்'

கரணவாய், ஓக. 13
நெல்லியடி புதிய சந்தையில் இயங்கிய கடைகளில் 8 கடைகள் பிரதேச சபை சட்டங்களுக்கு முரணாக இயங்கி வந்துள்ளன எனத் தெரிவித்து அவற்றுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளன. பிரதேச சபையிடம் கடைகளை குத்தகைக்குப் பெற்ற உள்ளூர் வர்த்தகர்கள்,

2

## புதிய அமைச்சர்களுக்கு கடிவாளம் இட்டார் கோத்தா

கொழும்பு, ஓக. 13
தற்போது அரச நிறுவனங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள தலைவர்கள் உட்பட, இயக்குநர்கள் குழுவின் உறுப்பினர்கள், தன்னுடைய ஒப்புதல் இல்லாமல் மாற்றப்படக்கூடாது என்று ஜனாதிபதி கோத்தாபய அமைச்சர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.
அதற்கு உரித்தான நியமனங்கள் அந்த நோக்கத்துக்காக நியமிக்கப்பட்ட சிறப்புக் குழுவால் மேற்பார்வை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இது தொடர்பான உத்தரவை அனைத்து அமைச்சர்களுக்கும்

2



## வெளிமாவட்ட மீனவரின் வாடிகள் எரிக்கப்பட்டன

### தும்பளையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 13
பருத்தித்துறை கற்கோவளம் தும்பளைப் பகுதியில் அமைந்துள்ள வெளிமாவட்ட மீனவர்களின் 5 வாடிகள் இன்று காலை இனந்தெரியாதோரால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
கடலட்டை பிடிப்ப

2

## தங்குமிட விடுதியிலிருந்து இரண்டு ஆண்கள், பெண்கள் பொலிஸாரால் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஓக. 13
யாழ்ப்பாணம் நல்லூர் ஆலய முன்வீதியில் அமைந்துள்ள தங்குமிட விடுதியிலிருந்து இரண்டு ஆண்கள் மற்றும் இரண்டு பெண்கள் நேற்று இரவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

2

## கூட்டுக் கட்சிகளுக்கு சஜித் 'வேட்டு' சகாக்களுக்கே தேசியப் பட்டியல்!

### நவீனின் தம்பியும் சபைக்கு வருகிறார்

கொழும்பு, ஓக. 13
இழுபறி நிலையில் இருந்துவந்த தேசியப்பட்டியல் பிரச்சினைக்கு சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி நேற்றுத் தீர்வு கண்டது. பங்காளிகளின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, தேசிய அமைப்பாளர் ஹரின் பெர்னாண்டோ, முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்

2

## புதினம் ? தெரியுமோ

யப்பிரமாணம் எடுக்க, எல்லாருக்கும் வெறுத்துப் போச்சு. பிறகு மெல்ல மெல்ல விக்கியர் மீதான விம்பம் கொஞ்சம் கொஞ்சமா மாறி , அவருக்கும் இஞ்சத்த சனத்தின்ர நாடித்துடிப்பு பிடிபட்டு, ஒரு முழுத் தமிழ்த் தேசிய அரசியல்வாதியாக பதவி முடியிற காலத்துக்குள்ள பரிணாம வளர்ச்சி அடைஞ்சிட்டார்.

இப்ப என்னடாவெண்டால் எந்த விக்கியர் மாகாணசபை முதலமைச்சராக மஹிந்தவுக்கு முன்னால நிண்டு பதவிப்பிரமாணம் செய்தாரோ அதே விக்கியர் இண்டைக்கு, தமிழினப் படுகொலை நடந்த முள்ளிவாய்க்காலில போய் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிப்பிரமாணம் செய்திருக்கிறார்.

எந்தளவு தூரம் அவர் வெளியால மட்டுமல்ல மனசாலையும் மாறியிருக்கிறார் எண்டதுக்கு இதுவும் ஒரு எடுத்துகாட்டு.

வெறும் அரசியலுக்காக முள்ளிவாய்க்காலை பாவிக்காமல், அங்க நடந்த இனப்படுகொலைக்கும் நீதி கேட்டு விக்கியர் பார்லிமெண்டிலயும் குரல் குடுப்பாரா? குடுப்பார் எண்டுதான் நம்புறம். எதுக்கும் பொறுத்திருந்து பாப்பம்.

—பட்சி

## புதிய அமைச்சர்களுக்கு...

ஜனாதிபதியின் செயலர் பி.பி.ஜெயசுந்தர அனுப்பியுள்ளார்.

அமைச்சுகளுக்குப் பொறுப்பான அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் நேற்றுக் காலை கண்டி தலதா மாளிகை வளாகத்தில் உள்ள மகுல் மடுவ மண்டபத்தில் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

இந்நிலையில், பதவிப்பிரமாணம் செய்துகொண்ட அனைத்து அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கே ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். (ஓ,5)

## நெல்லியடியில்...

அவற்றை வெளியிடங்களைச் சேர்ந்த முஸ்லிம் வர்த்தகர்களுக்கு குத்தகைக்கு வழங்கியிருந்ததாகவும், பிரதேச சபைச் சட்டத்துக்கு இது முரணானது என்பதால் சீல் வைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (ஓ,5,108)



## சீன நிறுவனத்துக்கு எதிராக மக்கள் தொடர்ந்து எதிர்ப்பு

கொழும்பு, ஓக.13

தெற்கு அதிவேக நெடுஞ்சாலைகளை நிர்மாணித்த சீன நிறுவனத்துக்கு எதிராக அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மக்கள் தொடர்ந்து எதிர்ப்பு நடவடிக்கைளில் ஈடுபட்டுள்ளனர். இந்த நெடுஞ்சாலை பணிகளுக்காக கருங்கற்களைப் பெற்றுக்கொள்ள சென்ற வேளையிலேயே இந்த எதிர்ப்பு நடவடிக்கையை மக்கள் வெளிப்படுத்தினர்.

கருங்கற்களை உடைப்பதற்கு பயன்படுத்தப்படும் வெடிப்பொருள்களால் குடியிருப்புக்களுக்கு சேத ம் ஏற்படுகிறது எனவும் இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# ஹிட்லரை...

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியில் இன்று சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதேச செயலகங்கள், மாவட்டச் செயலகங்கள் உள்ளடங்கலான உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளமை தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த விக்னேஸ்வரன், இராணுவப் பின்னணியைக் கொண்ட ஒருவர் ஜனாதிபதியாக வந்தால் அவர் மறுநாளே ஜனநாயகத்துக்கு திரும்பி விடுவார் என்று எதிர்பார்க்க முடியாது. அவருடைய பின்னணியை ஒத்ததாகவே நிர்வாகமும் அமையும். அதற்கு ஏற்றவாறு கோத்தாபய செயற்படுகின்றார். எல்லா வகையிலும் இராணுவ ஆட்சியைக் கொண்டு வரக் கூடிய விதத்தில் அவர் செயற்படுகின்றார். இராணுவ ஆட்சி என்று கூறாமலேயே, ஜனநாயக விதத்தில் இராணுவ ஆட்சியை ஏற்படுத்த முயல்கின்றார்.

ஹிட்லர் கூட முறையாகத்தான் தெரிவு செய்யப்பட்டு பதவிக்கு வந்தார். அதன் பின்னர்தான் அவர் சர்வாதிகாரியாக மாறினார். சர்வாதிகாரத்துக்குரிய சகல விதமான தகைமைகளையும் நான் இவர்களிடம் காண்கின்றேன். அந்த அடிப்படையில்தான் இவர்கள் செல்வார்கள் என்றும் நான் நினைக்கின்றேன். அதற்காக நாங்கள் பயந்துவிட்டோம் என்று அர்த்தமில்லை, என்றார். (ஓ,5)

## முதலாவது....

அதேவேளை, எதிர் வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் கடமைகளை பொறுப்பேற்க வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அறிவுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான புதிய அரசின் அமைச்சரவை நியமனம் வழங்கல் நேற்று இடம்பெற்றது. இந்த நிலையில் புதிய அமைச்சரவையின் கன்னிக் கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை அமைச்சர்களும், இராஜாங்க அமைச்சர்களும் எதிர்வரும் 17ஆம் திகதி அதாவது திங்கட்கிழமைக்கு முன்னர் தங்கள் கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். 9ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு எதிர்வரும் வியாழக்கிழமை 20ஆம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ,5)

## கூட்டு கட்சிகளுக்கு...

கார், திஸ்ஸ அத்தநாயக்க, எரான் விக்கிரமரத்ன, மயந்த திஸாநாக்க மற்றும் டயானா கமகே ஆகியோர் தேசியப்பட்டியல் ஆசனங்களுக்காக பெயரிடப்பட்டுள்ளனர்.

பொதுத்தேர்தலில் 27 லட்சத்து 71 ஆயிரத்து 980 வாக்குகளைப்பெற்ற ஐக்கிய மக்கள் சக்திக்கு ஏழு தேசியப்பட்டியல் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டன.

இந்நிலையில் உறுதியளிக்கப்பட்டவாறு தமது கட்சிகளுக்கு தேசியப்பட்டியல் ஒதுக்கீடு வழங்கப்படவேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றின் தலைவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனால் தேசியப்பட்டியலை இறுதிப்படுத்துவதில் குழப்பநிலை உருவானது. பல சுற்று பேச்சுகள் நடைபெற்றன. இறுதியில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதில் மயந்த திஸாநாயக்க என்பவர் நவீன் திஸாநாயக்கவின் தம்பியாவார். ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிராக நவீன் திஸாநாயக்க இம்முறை ஐக்கிய தேசியக் கட்சியில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ,5,44)

## கன்சைட் கடற்படை...

தளத்தில் உள்ள கன்சைட் பகுதியை நல்லாட்சி அரசில் கோத்தா முகாம் என அழைத்தனர் எனவும் சுமித் ரணசிங்க குறிப்பிட்டுள்ளார்.

700 விடுதலைப் புலிகள் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர் என்று நல்லாட்சி அரசில் தெரிவிக்கப்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரனே, கோத்தாபாய முகாம் என்பதை ஊடகங்களுக்கு முதலில் தெரிவித்தார் எனவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த நிசாந்த சில்வா மற்றும் சானி அபயசேகர ஆகியோரும் கோத்தா முகாம் என்று கூறியிருந்ததாகவும் அந்த அதிகாரி சாட்சியம் வழங்கியுள்ளார். (ஓ,5)

## வெளி மாவட்ட...

தற்காக வெளிமாவட்ட மீனவர்கள் அந்தப் பகுதியில் வாடிகள் அமைத்துள்ளனர். இதற்கு எதிராக உள்ளூர் மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். வழக்கும் தாக்கல் செய்யப்பட்டு அது தள்ளுபடியும் செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் இன்று காலை 4 மணிக்கும் 5 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் வாடிகள் எரிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பகுதியில் 11 வாடிகள் அமைக்கப்பட்டுள்ளன. எரிக்கப்பட்ட 5 வாடிகளையும் சேர்ந்த மீனவர்கள், அருகிலிருந்த வாடிகள் தங்கியிருந்த போது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனக் கூறப்படுகின்றது. (ஓ,5,20,26,108)

## இரண்டு ஆண்கள், ....

அவர்கள் விபசாரத்தில் ஈடுபட்ட சந்தேகத்திலேயே தாம் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் தரப்பு தெரிவித்ததாவது:

நல்லூர் ஆலய முன்வீதியில் அமைந்துள்ள தங்குமிட விடுதியில் விபச்சாரம் இடம்பெற்று வருவதாக இரகசியத் தகவல் கிடைத்தது.

தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் தங்குமிட விடுதியை முற்றுகையிட்டனர்.

அங்கு சந்தேகத்துக்கு இடமான முறையில் தங்கியிருந்த தென்னிலங்கையைச் சேர்ந்த இரண்டு பெண்கள் மற்றும் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட பெண்கள் கொழும்பு மற்றும் புத்த ளத்தைச் சேர்ந்தவர்கள். ஆண்கள் இருவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள், என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ,5,20,106)



# வீரமுனை படுகொலை; நினைவுதினம் அனுஷ்டிப்பு

அம்பாறை, ஓக.13

அம்பாறை வீரமுனையில் 232 தமிழர்கள் கொல்லப்பட்ட சம்பவம் இடம்பெற்று 30 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் நேற்று புதன்கிழமை வீரமுனையில் அமைந்துள்ள நினைவுத் தூபிக்கு முன்னால் நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. இதன்போது, நினைவுத் தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டவர்களை நினைவு கூர்ந்து சுடர் ஏற்றி ஒரு நிமிட அஞ்சலியுடன் அகவணக்கமும் செலுத்தப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரம், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் மற்றும் உள்ளூராட்சி தவிசாளர்கள், உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

யுத்த காலத்தில் பல நூற்றுக்கணக்கான மக்கள் வீரமுனை சிந்தா யாத்திரைப் பிள்ளையார் கோயிலிலும் வீரமுனை இராமகிருஷ்ண மிசன் பாடசாலையிலும் தஞ்சம் புகுந்திருந்தனர். இந்த நிலையில் 1990ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி 400இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் சுட்டும் வெட்டியும் கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரி3)



# முள்ளிவாய்க்காலிலிருந்து நாடாளுமன்றப் பயணம்

## ஆரம்பித்தார் சி.வி.விக்னேஸ்வரன்

முல்லைத்தீவு, ஓக.13

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவருமான சி வி விக்னேஸ்வரன் தனது நாடாளுமன்றப் பயணத்தை முள்ளிவாய்க்கால் மண்ணில் இன்று சத்தியப் பிரமாணம் செய்து ஆரம்பித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவுதூபிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தியதுடன் தனது சத்தியப் பிரமாண உரையையும் நிகழ்த்தினார். (ஐ-20)

# பாதாளக் குழுவினர் நால்வர் கைது

கொழும்பு, ஓக.13

பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த நால்வர், வந்துராமுல்லவனப் பிரதேசத்திலுள்ள பாழடைந்த வீடொன்றில் மறைந்திருந்த நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து கைக்குண்டுகள், கூரான ஆயுதங்கள், போதைப்பொருள்கள் என்பவை மீட்கப்பட்டுள்ளன என நவகமுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவர்கள் கடந்த சில நாள்களாக நவகமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில், கப்பம் பெறும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தமை விசாரணையில் தெரியவந்துள்ளது. (ரி1)

# த.தே.ம.முன்னணி எம்.பிக்களின் உறுதியுரை சனியன்று முள்ளிவாய்க்காலில்!

முல்லைத்தீவு, ஓக. 13

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் புதிதாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவான உறுப்பினர்களது உறுதிப் பிரமாணம் முள்ளிவாய்க்காலில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் அறிவித்துள்ளார். (ஐ)

பொலிஸார் நடத்திய

# துப்பாக்கிச் சூட்டிலிருந்து தப்பிச் சென்ற கொள்ளையர்!

கொழும்பு, ஓக.13

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டை மீறி கொள்ளையர்கள் தப்பிச் சென்ற சம்பவம் ஒன்று பூகொடை நகரில் இடம்பெற்றுள்ளது. பூகொடை நகரத்தில் உள்ள ஆடை விற்பனை நிலையமொன்றில் கொள்ளையடித்துச் சென்ற நபர்கள் மீது பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

எவ்வாறாயினும், துப்பாக்கிச் சூட்டுக்கு மத்தியில் கொள்ளையர்கள் தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை நவகமுவ பகுதியில் இடம்பெற்ற குற்றச்செயல்களுடன் தொடர்புடைய மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. சந்தேகநபர்களிடம் இருந்து 5 வாள்கள், 2 கையெறி குண்டுகள், மன்னா கத்தி ஒன்று 3 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)

அரசவைக் கட்டட இடிப்பு விவகாரம்:

# குருநாகல் மேயர் உட்பட ஐவருக்கு எதிரான பிடியாணையை செயற்படுத்த அவகாசம்

குருநாகல், ஓக.13

குருநாகல் அரசவைக் கட்டடத்தை சேதப்படுத்தியமை தொடர்பில், குருநாகல் மாநகர மேயர் துஷார சஞ்ஜீவ விதாரண உள்ளிட்ட ஐவரைக் கைதுசெய்ய பிறப்பிக்கப்பட்டுள்ள பிடியாணையை எதிர்வரும் 24 ஆம் திகதிவரை செயற்படுத்த வேண்டாம் என மேன் முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தம்மைக் கைதுசெய்ய குருநாகல் நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்துள்ள பிடியாணையை ரத்துச் செய்யுமாறு கோரி, குருநாகல் மாநகர மேயர் துஷார சஞ்ஜீவ விதாரண உள்ளிட்ட ஐவரும் மேன் முறையீட்டு நீதிமன்றில் ரீட் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர். சட்டத்துக்கு முரணாக தமக்கு எதிரான பிடியாணைகள் பெறப்பட்டுள்ளதாகவும், எனவே அவற்றை வலுவிழக்கச் செய்யுமாறும் சந்தேக நபர்கள் மேன் முறையீட்டு நீதிமன்றைக் கோரியிருந்தனர். அவை இன்று பரிசீலிக்கப்பட்டபோதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

குறித்த 5 ரீட் மனுக்களையும் விசாரணைக்கு ஏற்று பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் அனுப்புவதா? இல்லையா?, பிறப்பிக்கப்பட்டுள்ள பிடியாணைக்கு விசாரணை முடியும் வரை இடைக்காலத் தடை விதிப்பதா? என்பது குறித்த தீர்மானத்தை எதிர்வரும் 24 ஆம் திகதி அறிவிப்பதாகச் சுட்டிக்காட்டிய நீதிமன்றம், அந்தத் தீர்மானம் அறிவிக்கப்படும் வரை மனுதாரர்களை கைது செய்யக்கூடாது என உத்தரவிட்டது.

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களில், குருநாகல் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் கபில அதிகாரி, பிராந்திய விஷேட விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஆர். டி. குலதுங்க, பதில் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரத்ன, தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் செனரத் திஸாநாயக்க, குருநாகல் நீதிவான் சம்பத் ஹேவாவசம் மற்றும் சட்டமா அதிபர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

குருநாகல் இரண்டாவது புவனேகபாகு மன்னரின் அரசவை காணப்பட்டதாக கூறப்படும் இடத்திலிருந்த பழைமை வாய்ந்த கட்டடத்தை சேதப்படுத்தியமை தொடர்பில், குருநாகல் மாநகர மேயர், நகர ஆணையாளர் உள்ளிட்ட ஐவரை கடந்த 10 ஆம் திகதிக்குள் கைது செய்து மன்றில் ஆஜர் செய்யுமாறு குருநாகல் நீதிவான் கடந்த 7 ஆம் திகதி உத்தரவிட்டிருந்தார். இந்த விவகாரம் தொடர்பில் சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி தப்புல டி லிவேரா குருநாகல் நீதிவானுக்கு சமர்ப்பித்திருந்த விசேட ஆவணங்களையும் பரிசீலித்தே நீதிவான், சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சரத் ஜயமான்ன முன்வைத்த விடயங்களையும் ஆராய்ந்து இந்த பிடியாணை பிறப் பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி3)

# கொரோனா தொடர்பான தவறான தகவலால் 800 பேர் உயிரிழப்பு

## ஆய்வில் தகவல்

கொரோனாத் தொற்றுடன் தொடர்புடைய தவறான தகவல்களின் காரணமாக உலகம் முழுவதிலும் இந்த ஆண்டு முதல் மூன்று மாத காலப்பகுதியில் சுமார் 800 பேர் உயிரிழந்துள்ளனர் என ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது. அமெரிக்க ஜேர்ணல் ஒவ் ரொபிக்கல் மெடிஸின் அன்ட் ஹைஜின் (American Journal of Tropical Medicine and Hygiene) வெளியிடப்பட்டுள்ள ஆய்வில் இந்தத் தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது என பி.பி.சி தெரிவித்துள்ளது. சமூக ஊடகங்களில் பரப்பப்பட்ட தவறான தகவல்களின் காரணமாக சுமார் 5 ஆயிரத்து 800 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர் எனவும் அந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிகம் பேர் மெத்தனோல் அல்லது மதுசாரம் அடங்கிய தூய்மைப்படுத்தும் திரவியங்களைப் பருகியமையால் உயிரிழந்துள்ளனர். இந்த தயாரிப்புகள் வைரஸுக்கு மருந்தாகும் என அவர்கள் நம்பியுள்ளனர் என ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ரி1)

# உரிய காலத்தில் சொத்து விவரங்களை கையளிக்காவிடில் சட்ட நடவடிக்கைகள்

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஓக.13

பொதுத் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள உறுப்பினர்கள் மற்றும் தெரிவாகாதவர்கள் தமது சொத்துக்கள் பற்றிய விபரங்களை தேர்தல்கள் ஆணைக்குழுவில் கையளிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. விவரங்களை உரிய காலத்தில் கையளிக்கத் தவறுபவர்கள் சட்டத்தை மீறுபவர்களாக கருதப்படுவர் என்பதோடு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய விடயங்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அவர்களைப் பற்றி அறிக்கையிடும் என்று சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.




இவ்விடயம் தொடர்பில் நேற்று புதன்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது; 1988 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் திருத்தச் சட்டத்திற்கமைய, 1975 ஆம் ஆண்டு இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகும் வேட்பாளர் தனது சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றி வெளிப்படுத்த வேண்டியது அவசியமாகும். எனவே தேர்தலில் வாக்களிப்பதற்கு முன்னர் அல்லது முதலாவது நாடாளுமன்ற அமர்வு இடம்பெறுவதற்கு முன்னர், குறித்த வேட்பாளர்கள் தெரிவத்தாட்சி அலுவலர் ஊடாகவோ அல்லது நேரடியாகவோ தேர்தல் ஆணைக்குழுவில் கையளிக்க வேண்டும். தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளவர்கள் இது வரையில் தமது சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்தல்களை கையளிக்க முடியாதவர்கள் உடனடியாக அந்தந்த தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஊடாகவோ அல்லது நேரில் வந்து தேர்தல் ஆணைக்குழுவிலோ கையளிக்க வேண்டும். இதேபோன்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படாத வேட்பாளர்கள் இம்மாதம் 7 ஆம் திகதி யிலிருந்து செப்டெம்பர் 6 ஆம் திகதிக்கு முன்னர் தமது சொத்து விவரங்களை தேர்தல் ஆணைக்குழுவில் வெளிப்படுத்த வேண்டும். சொத்து விவரங்களை வெளிப்படுத்தாதவர்கள் 1988 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் திருத்தச் சட்டத்திற்கமைய , 1975 ஆம் ஆண்டு இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுகின்ற தவறை இழைப்பவர்களாகக் கருதப்படுவதோடு , இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய விடயங்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அவர்களைப் பற்றி அறிக்கையிடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)

# மாதாந்தம் 30 ஆயிரம் பி.சி.ஆர்.பரிசோதனைகள்

கொழும்பு, ஓக.13

கொரோனாத் தொற்றாளர்களை விரைவில் கண்டறியும் நோக்கில் மாதாந்தம் 30 ஆயிரம் பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என தேசிய தொற்று நோயியல் பிரிவின் நிபுணர் வைத்தியர் சுதாத் சமரவீர தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்கள் காரணமாக ஒருவர் உயிரிழக்கும் நிலையில் அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும். கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் ரஷ்யாவினால் தயாரிக்கப்பட்டுள்ள தடுப்பூசி தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டதன் பின்னர் இலங்கையில் உள்ள தொற்றாளர்களுக்கு அத் தடுப்பூசி செலுத்தப்படும். என்றார்.

இந்நிலையில் இன்றைய தினம் கொரோனாத் தொற்றிலிருந்து 16 பேர் பூரண குணமடைந்து வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. அதன்படி, நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றிலிருந்து பூரண குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2,638 ஆக அதிகரித்துள்ளது எனவும் தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. (ரி3)

# புதியவர் அறுவருக்கு இராஜாங்க அமைச்சு

கொழும்பு, ஓக.13

9ஆவது நாடாளுமன்றத்துக்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட 6 பேருக்கு இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கமைய ஜீவன் தொண்டமான், சஷீந்ர ராஜபக்ஷ, நாலக கொடஹேவா, அஜித் நிவார்ட் கப்ரால், சன்ன ஜயசுமன மற்றும் சீதா அரம்பே பொல ஆகியோருக்கு இராஜாங்க அமைச்சு பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அட்மிரல் சரத் வீரசேகரவுக்கு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற சபைகள் இராஜாங்க அமைச்சு வழங்கப்பட்டுள்ளது. இவர் 8ஆவது நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கவில்லை. 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான 7வது நாடாளுமன்றத்தில் உறுப்பினராக பதவி வகித்தார். இந் நிலையில் 2020 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் பொதுஜன பெரமுன கட்சியில் போட்டியிட்டு விருப்பு வாக்குப் பட்டியலில் முதலிடம் பெற்று 9ஆவது நாடாளுமன்றத்துக்கு இவர் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் புதிய முகங்கள் பலருக்கு மாவட்ட அபிவிருத்தி தலைவர் பதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. (ரி1)

# சீசெல்ஸ் தீவில் இலங்கை மீனவர்கள் 7 பேர் விளக்கமறியலில்!

கொழும்பு, ஓக.13

இலங்கை மீனவர்கள் 7 பேர் சீசெல்ஸ் நாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 17 ஆம் திகதி சீசெல்ஸ் கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மீனவர்களே இவர்கள் எனவும், இவர்களிடமிருந்து 7 தொன் மீன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இம் மீனவர்கள் அவர்களது படகினுள் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ரி3)

### இந்தியாவிலிருந்து கடத்திய

# 6 ஆயிரம் கிலோ மஞ்சளை கடற்படை கைப்பற்றியது

சிலாபம், ஓக.13

இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு கடத்தப்பட்ட 6 ஆயிரம் கிலோகிராம் மஞ்சளை சிலாபம் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர். சிலாபத்திலிருந்து 10 கடல் மைல் தொலைவில் சந்தேகத்திற்கிடமான முறையில் காணப்பட்ட படகை சோதனை செய்த போதே இந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்டுள்ள படகு விசாரணைக்காக டிக்கோவிடா மீன்வள துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இதன்போது நான்கு பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மேலும் ஒன்பது பேரை சிலாபம் பொலிஸார் கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து சிறிய ரக வான் மற்றும் 2,242,500 ரூபா பணம் என்பனவும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (ரி1)

# தொற்றா நோய்கள் தடுப்பு தொடர்பில் தாதியருக்கு பயிற்சிக் கருத்தரங்கு

கொழும்பு, ஓக.13

தொற்றா நோய்களைத் தடுப்பது தொடர்பான தெளிவூட்டல்களை மக்களுக்கு வழங்கும் நோக்கத்துடன் தாதியர்களுக்கு பயிற்சிக் கருத்தரங்கு நடத்தப்படுகின்றது.

இதனை சுகாதார அமைச்சின் சுகாதார மேம்பாட்டுப் பணிமனை ஏற்பாடு செய்துள்ளது எனவும், முதற்தொகுதிக்கான பயிற்சிகள் மொறட்டுவ சர்வோதய வள நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் தொற்றா நோய் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் டொக்டர் விந்தியா குமாரபேலி தெரிவித்தார்.

இந்தக் கருத்தரங்கானது தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளைச் சேர்ந்த தாதியர்களுக்காக நடத்தப்படுகின்றது. இதன் பிரகாரம் தொற்றா நோய்களை முன்கூட்டியே கண்டுபிடிப்பது, அவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பது, சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் பற்றி அறிவூட்டுவது, தரவுகளைத் திரட்டுவது போன்றன தொடர்பில் தாதி உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி3)

# கொரோனா கொத்தணிப் பரவலுக்கு வாய்ப்புக்கள் அதிகம்



### எச்சரிக்கின்றது தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு

கொழும்பு, ஓக.13

சமூக மட்டத்தில் ஏதாவது ஒரு வகையில் கொரோனா நோயாளி ஒருவர் அடையாளம் காணப்பட்டால் அது கொத்தணியாகப் பரவும் ஆபத்துக்கள் உள்ளன என தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு எச்சரித்துள்ளது.

இந்த வாரத்தில் இருந்து நாடு முழுமையாக இயங்க ஆரம்பித்துள்ளமையினால் இந்த நிலை ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன என தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் பிரதான வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டமை, புதிய அமைச்சுக்களில் கடமைகள் ஆரம்பிக்கப்பட்டமை மற்றும் மக்கள் சாதாரணமாக இயங்க ஆரம்பித்துள்ளமை ஆகியவற்றினால் சமூகத்திற்கு கொரோனா பரவும் ஆபத்து தீவிரமடைந்துள்ளன. இந்நிலையில் சமூகத்தில் ஒரு கொரோனா நோயாளி இருந்தாலும் அது தீவிரமாகப் பரவும் ஆபத்துக்கள் உள்ளன.

இவற்றைக் கருத்திற்கொண்டு வைரஸ் தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு சுகாதார வழிக்காட்டல்களை மிகவும் தீவிரமாகவும், இறுக்கமாகவும் பின்பற்ற வேண்டும் என அவர் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ரி3)





## லிந்துலை தீ விபத்து:

# பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்க நடவடிக்கை

### ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

நுவரெலியா, ஓக.13

லிந்துலை, பம்பரகலை நடுப்பிரிவு தோட்டத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிக இருப்பிடங்களை அமைப்பதற்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிரந்தர வீடுகளை அமைப்பதற்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இராஜாங்க அமைச்சராக பதவியேற்றுள்ள ஜீவன் தொண்டமான், முதலில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட லிந்துலை பம்பரகலை நடுப்பிரிவு தோட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

அங்கு தீ விபத்தால் பாதிக்கப்பட்டுள்ள 24 குடும்பங்களையும் சந்தித்து அர்களுக்கு ஆறுதல் கூறிய மையுடன், தற்காலிகமாக தங்குமிட வசதிகளை யும், அவர்களுக்கான உலர் உணவுகளையும் வழங்க பெருந்தோட்ட மனிதவள அபிவி ருத்தி நிதியத்தின் ஊடாகவும், அக்கரப்பத் தனை பிரதேச சபையின் ஊடாகவும் ஏற்பாடுகளைச் செய்துள்ளார். அத்துடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகள் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (ரி3)

# மேர்வின் சில்வாவின் மகன் பிணையில் விடுவிப்பு

கொழும்பு, ஓக.13

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு தலங்கம பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட நிலையில், நேற்றைய தினம் கடுவலை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது இவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தலங்கம பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவருக்கு மரண அச்சுறுத்தல் விடுத்து இரண்டு இலட்சம் ரூபாய் பணத்தைப் பெற முயன்றமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் இவர் கைதுசெய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி3)

## புலம்பெயர் தொழிலாளர்களுக்கு

# கொவிட்-19 பரிசோதனை அறிக்கை கட்டாயமானது

### சைப்பிரஸ் அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஓக.13

சைப்பிரஸ் நாட்டுக்கு தொழிலுக்காகச் செல்லும் தொழிலாளர்கள் அந்நாட்டுக்குச் செல்வதற்கு முன்னர் கொவிட்19 தொற்று இல்லை என்பதை உறுதிப்படுத்தலுக்கான பரிசோதனை அறிக்கையைப் பெற வேண்டும் என அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பரிசோதனை அறிக்கையில் மாதிரியைப் பெற்றுக்கொண்ட தினம், பரிசோதனை அறிக்கைக்கான நடைமுறை (RT-PCR என்பதாக அமைந்திருக்க வேண்டும்), விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் பரிசோதனையின் பெறுபேறு ஆகிய விவரங்கள் அவசியம் இடம்பெறவேண்டும். இந்தப் பரிசோதனைக்கு மேலதிகமாக கொவிட்19 தொற்று இருப்பதை கண்டறிவதற்கு மேற்கொள்ளப்பட்ட ஏனைய வழிமுறைகளான நோய் எதிர்ப்பு மற்றும் உடற்காப்பு (Antibody / Antigen) செல்லுபடியற்றதாகும்.

மேலே குறிப்பிட்ட தகவல்கள் அல்லாத பரிசோதனை அறிக்கை சைப்பிரஸ் அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

அந்த விவரங்கள் உள்ளடங்கிய பரிசோதனை அறிக்கை இல்லாத வெளிநாட்டவர்களுக்கு நாட்டிற்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என சைப்பிரஸில் உள்ள இலங்கை கொன்சல் ஜெனரல் அலுவலம் அறிவித்துள்ளது என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ரி3)

# சுயாதீனமாக முன்னோக்கிச் செல்ல மக்கள் அதிகாரம் வழங்கியுள்ளனர்

### நியங்கொட விஜித்தசிறி அனுநாயக்க தேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.13

இம்முறை பொதுத் தேர்தலில் ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்திற்கு சுயாதீனமாக முன் நோக்கிச் செல்வதற்கான அதிகாரத்தை மக்கள் வழங்கியுள்ளனர் எனவும் அதனை சரியாக இனங்கண்டு சவால்களை வெற்றிகொள்ள வேண்டும் எனவும் நியங்கொட விஜித்தசிறி அனுநாயக்க தேரர் ஆசிர்வாதம் வழங்கினார். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் நேற்றுப் பதவியேற்ற புதிய அமைச்சர்கள் மூன்று நிக்காயக்களினதும் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டனர். நேற்றுப் பிற்பகல் மல்வத்து மகா விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவைக்கு மல்வத்து மகாநாயக்க சங்கைக்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல, அனுநாயக்க தேரர்களான சங்கைக்குரிய நியங்கொட விஜித்தசிறி ஆகியோரும்-

சங்கைக்குரிய திம்பல்கும்புரே விமலதம்ம, லேக்ககாதிகாரி சங்கைக்குரிய பஹமுனே சிறிசுமங்கல தேரர் உள்ளிட்ட காரக்க சங்க சபையின் மகா சங்கத்தினரும் பிரித் பாராயணம் செய்து ஆசிர்வாதம் வழங்கினர். அரசாங்கம் ஒன்றின் அமைச்சரவை நியமிக்கப்பட்டு ஜனாதிபதியுடன் மூன்று நிக்காயவினதும் மகாநாயக்க தேரர்களை அத்தினமே சந்தித்தது அரசியல் வரலாற்றில் முதல் தடவையாக நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி1)





# கற்றல் செயற்பாடுகளை வழமை போல் ஆரம்பிக்கலாம்

## கல்வி அமைச்சு ஆலோசனை

கொழும்பு, ஒக.13



பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பில் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட ஆலோசனைக் கோவையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

200 இற்கும் அதிகமான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில், கல்வி நடவடிக்கைகளுக்காக ஒவ்வொரு தரத்துக்கும் வெவ்வேறு தினங்கள் ஒதுக்கப்பட்டன. எனினும், கொரோனா வைரஸ் தொற்றின் தற்போதைய நிலைமையைக் கருத்திற் கொண்டு, அந்தக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கு தீர்மானம் மேற்கொண்டுள்ளோம் என கல்வி அமைச்சின் செயலாளர் என்.எச்.எம். சித்ரானந்த தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், சுகாதார வழிமுறைகளுக்கு ஏற்ப கல்வி நடவடிக்கைகளை தொடர முடியுமாயின் வழமை போன்று மாணவர்களை பாடசாலைக்கு அழைப்பதில் எவ்வித தடையும் இல்லை என கல்வி அமைச்சு, அதிபர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. (ரி3)

# இலங்கைத் தமிழும் தமிழரும் ஆய்வரங்கில் நாளை

யாழ்ப்பாணம், ஒக.13

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் தமிழ்நாடு மதுரை உலகத் தமிழ்ச்சங்கமும் இணைந்து சூம்(Zoom) செயலி வாயிலாக 20 நாள்களுக்கு இலங்கையில் தமிழும் தமிழரும் என்ற பொருளில் இணையவழியில் ஆய்வு மாநாட்டை முன்னெடுத்து வருகின்றன.

இதன் பதினைந்தாவது நாளாகிய நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் சி.மௌனகுரு, "இலங்கைத் தமிழர் கூத்து மரபு" என்ற பொருளில் ஆய்வுரை ஆற்றவுள்ளார்.

இணையவழியில் பங்கேற்க விரும்பும் ஆர்வலர்கள் பின்வரும் கடவுச்சொல்லைப் பயன்படுத்திக் கலந்து பயன்பெற முடியும் எனத் தமிழ்ச்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ரி3)

Zoom meeting ID : 477 159 8996
pass word : wts

# மீண்டும் விசா வழங்க மலேசிய அரசு முடிவு

கோலாலம்பூர், ஒக.13

தொழில்வாய்ப்புகளுக்காக மலேசியா செல்லும் இலங்கையர்களுக்கு விசா வழங்கும் நடவடிக்கையை மீண்டும் ஆரம்பிக்க மலேசிய அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

அதன்படி இலங்கையர்களுக்கான இந்த விசாக்களை டிசம்பர் 31 ஆம் திகதிக்கு பின்னர் மீண்டும் வழங்க மலேசிய அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது. இதடிப்படையில் முதலில் வீட்டுப் பணியாளர்களாக வேலை செய்ய விண்ணப்பிப்பவர்களுக்கு விசா வழங்கப்படும் என்று மலேசியாவில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ரி1)

# அங்கொட லொக்கா அணியின் துப்பாக்கிதாரி சுட்டுக் கொலை

கொழும்பு, ஒக.13



பாதாள உலகக் கும்பலின் திறமையான துப்பாக்கிதாரியாக கருதப்படும் சொல்டா என்ற அசித்த ஹேமதிலக பொலிஸாரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் இந்தியாவில் உயிரிழந்துவிட்டார் என நம்பப்படும் அங்கொட லொக்கா எனும் லசந்த சமிந்த பெரேராவின் குழுவைச் சேர்ந்தவர் ஆவார். மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட சொல்டா, முல்லேரியா பொலிஸ் பிரிவின் சந்திரிகா குமாரதுங்க மாவத்தையில் உள்ள இடமொன்றில் மறைத்து வைத்திருந்தார் எனக் கூறப்பட்ட ஆயுதங்களைக் காட்டுவதற்காக பொலிஸாரால் அழைத்துசெல்லப்பட்டிருந்தார்.

இதன்போது, பொலிஸார் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்த முறப்பட்டார் எனவும் அதனையடுத்து பொலிஸார் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் எனவும் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார். நேற்றுமுன்தினம் இரவு 9.45 மணியளவில், இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளதுடன் சம்பவத்தில் 35 வயதான சொல்டா படு காயமடைந்து முல்லேரியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டநிலையில் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் கூறினார். சொல்டா அங்கொட லொக்காவின் குழுவில் இருந்த மிகத் திறமைவாய்ந்த துப்பாக்கிதாரியாவார்.

கடந்த 2017 நவம்பர் 30 ஆம் திகதி பன்னிபிட்டிய ருக்மல் பகுதியில் மஞ்சுளா சந்துனி எனப்படும் அழகுக் கலை நிலைய பெண் ஒருவரைச் சுட்டுக் கொன்றமை, 2018 இல் முல்லேரியா பகுதியில் பொலி ரொஷான் எனப்படும் ரொஷான் பிரேம திலக்கவை சுட்டுக் கொன்றமை ஆகிய இரு சம்பவங்களின் போது, சொல்டாவே துப்பாக்கிதாரியாக செயற்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அங்கொட லொக்கா, இந்தியாவில் இறப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர் சொல்டாவுக்கு, கயான் எனும் பாதாள உலக உறுப்பினரைக் கொலைசெய்ய ஒப்பந்தம் ஒன்றைக் கொடுத்துள்ளார் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது என உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். (ரி1)

# லஞ்சம் பெற்ற போதைவஸ்து தடுப்புப் பிரிவு அதிகாரி கைது



மாவனல்லை, ஒக.13

பொலிஸ் போதைவஸ்து தடுப்புப் பிரிவு அதிகாரி ஒருவர் லஞ்ச ஊழல்களுக்கு எதிரான ஆணைக் குழு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாவனல்லை பகுதியில் பொது மகன் ஒருவரிடம் 10 ஆயிரம் ரூபா லஞ்சம் பெற்றபோதே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹெரோய்ன் போதைப்பொருளை விற்பனை செய்வதற்கும் ஏற்கனவே பறிமுதல் செய்யப்பட்ட மெமரி காட்டை அப் பொதுமகனிடம் திரும்பக் கொடுப்பதற்குமே லஞ்சம் பெறப்பட்டுள்ளது எனவும், கைதுசெய்யப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரி நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி3)

# 299 இலங்கையர் நாடு திரும்பினர்

கொழும்பு, ஒக.13

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் கட்டார் ஆகிய நாடுகளிலிருந்து மொத்தம் 299 இலங்கையர்கள் இன்று அதிகாலை நாடு திரும்பியுள்ளனர். டோஹாவிலிருந்து கட்டார் எயார்வேஸ் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான கியூ.ஆர் 668 என்ற விமானத்தில் 15 பேர் இன்று அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர். இவர்களில் 10 பேர் பயணிகள் ஆவர். மீதமுள்ள ஐந்து பேர் இலங்கையில் உள்ள இத்தாலிய மற்றும் பிரெஞ்சு தூதரகங்களின் அதிகாரிகள் ஆவர். மேலும் ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான யு.எல் 226 என்ற விமானத்தில் 289 இலங்கையர்கள் இன்று அதிகாலை மத்தள விமான நிலையத்தை வந்தடைந்தனர். (ரி1)

# அரசியல் பழிவாங்கல்கள்; புதிதாக 162 முறைப்பாடுகள்!

கொழும்பு, ஒக.13

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் புதிதாக 162 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் 48 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் ஏனைய 114 முறைப்பாடுகள் மீதான விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இதுவரையிலான காலப்பகுதியில் மொத்தம் ஆயிரத்து 842 முறைப்பாடுகள், அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ரி3)

## 102 நாள்களுக்குப் பின்னர்

# நியூஸிலாந்தில் மீண்டும் கொரோனாத் தொற்று!



வெலிங்டன், ஓக.13

நியூஸிலாந்தில் 102 நாள்க ளுக்குப் பின் மீண்டும் உள் ளூர் பரவல் மூலம் நான்கு பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருக்கின்றமை தெரியவந்துள்ளது.

நியூஸிலாந்தின் மாநகரங்க ளில் ஒன்றான ஒக்லாந்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேருக்கு கொரோனாப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து ஒக்லண்ட் நகரத்தில் மீண்டும் பொது முடக்கம் அறிவிக்கப்பட்டுள் ளது. நாட்டின் பிற பகுதிக ளில் சமூக இடைவெளிகள் கடைபிடிக்கப்படும். நியூஸி லாந்து கொரோனாத் தொற்றை கையாள்வதில் பிற நாடுகளைக் காட்டிலும் சிறப்பாகவே செயற்பட்டு வருகின்றது. பெப்ரவரி மாதம் அந்நாட்டில் முதல் தொற்று கண்டறியப்பட்டதி லிருந்து இன்றுவரை 1200 பேர் மட்டுமே கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள் ளனர் 22 பேர் உயிரிழந்துள் ளனர்.

முன்னதாக நியூஸிலாந்தில் 102 நாள்களுக்கு எந்த உள்ளூர் தொற்றும் ஏற்படாமல் இருந் தமை குறிப்பிடத்தக்கது. (ரி1)

### நியூஸிலாந்தின்

# பொதுத்தேர்தல் தாமதமாகலாம்

வெலிங்டன், ஓக.13

நியூஸிலாந்து பொதுத் தேர்தல் ஒத்திவைக்கப்ப டலாம் என்று அந்நாட்டுப் பிரதமர் ஜசிந்த ஆர்டென் தெரிவித்துள்ளார். மூன்று மாதங்க ளுக்கு பின்னர் நியூஸிலாந்தில் புதிய கொரோ னாத் தொற்று நோயாளர்கள் நால்வர் அடையா ளம் காணப்பட்டுள்ள நிலையில் இந்தத் தீர்மா னம் எடுக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான வாக்கெடுப்பு பணி களை ஜசிந்த ஆர்டென் தாமதப்படுத்தியுள்ள துடன், செப்டெம்பர் 19 ஆம் திகதி நடைபெற விருந்த பொதுத் தேர்தலுக்கான நாடாளு மன்றக் கலைப்பை அடுத்த திங்கள் வரையும் அவர் ஒத்திவைத்துள்ளார். (ரி1)

# பெண்களுக்கு சொத்தில் சமபங்கு

### இந்திய உச்சநீதிமன்றம் அறிவிப்பு

புதுடில்லி, ஓக.13

திருத்தப்பட்ட இந்து வாரிசு சட்டத்தின் படி பெண்களுக் கும் சொத்தில் சம பங்கு உண்டு என இந்திய உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. உச்ச நீதிமன்றத்தில் '2005 இந்து வாரிசு சட்டத்திருத் தம்' தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, திருத்தப்பட்ட இந்து வாரிசு சட்டத்தின்படி மகனைப் போன்று மகளும் சொத்தில் சம பங்கை பெறும் உரிமை உள்ளது. சட்டம் நடைமு றைக்கு வருவதற்கு முன்ன தாக சொத்துதாரர் இறந்திருந் தாலும் பெண்ணுக்கு சம பங்கு பெறும் உரிமை உள் ளது என நீதிமன்றம் தெரிவித் துள்ளது. (ரி1)



# அமெரிக்க துணை ஜனாதிபதிக்கான வேட்பாளராக கறுப்பின பெண் பரிந்துரை

வொஷிங்டன், ஓக.13

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் ஜோ பைடன் தமது துணை ஜனாதிபதி பத விக்கு கமலா ஹரிஸை பெயரிட்டுள்ளார். இந்தப் பதவிக்கு பெயரிடப்பட் டுள்ள முதலாவது கறுப்பி னத்தவரும் ஆசிய வம்சா வளி அமெரிக்கரும் இவராவார். இந்தியா ஜமேக்கா வம்சாவளியைச் சேர்ந்த இவர் கலிபோர்னிய செனட்டர் என்பதுடன், கலிபோர்னியாவின் முன்னாள் சட்ட மா அதிபருமாவார். இன அநீதி குறித்த சமூக அமைதி யின்மை பல மாதங்களாக அமெரிக்காவை உலுக்கிய தால், ஒரு கறுப்பினப் பெண்ணைத் தனது துணை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்க பிடென் அதிக அழுத்தங்களுக்கு உள்ளாகியிருந்தார். இந் நிலையிலேயே 55 வயது செனட் சபை உறுப்பின ரான கமலா ஹரிஸ் தேர்ந்தெடுக்கப்பட்டுள் ளார். (ரி1)

# முகமது நபியை அவமதிக்கும் முகநூல் பதிவால் கலவரம்

### மூவர் சூட்டுக்குப் பலி

பெங்களூர், ஓக.13

முகமது நபியை நிந்தனை செய்யும் முகநூல் பதிவு காரணமாக ஏற்பட்ட வன்முறைகளினால் பெங்களு ரில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

முகமது நபியை அவமதிக்கும் முகநூல் பதிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்திலேயே மூவர் கொல்லப்பட்டுள்ளனர். நபிகள் நாயகத்தை அவமதிக்கும் முகநூல் பதிவை மேற்கொண்ட நபர் ஒருவரின் உறவினரான உள்ளூர் அரசியல்வாதியின் வீட்டின் முன்னால் கூடிய மக்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர். ஆர்ப்பாட்டக் காரர்கள் வாகனங்களைத் தீயிட்டு கொளுத்தியதுடன் பொலிஸார் மீது கல்வீச்சு தாக்குதலை மேற்கொண்டுள் ளனர். வன்முறைகள் காரணமாக 60 பொலிஸார் காயம டைந்துள்ளனர் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்கு கண்ணீர் புகைப்பிரயோகமும் துப்பாக் கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி1)

# ரஷ்யாவின் கொரோனா வைரஸ் தடுப்பூசி முட்டாள்தனமான செயல்!

## எதிர்க்கின்றனர் உலக விஞ்ஞானிகள்



"கொரோனா வைரஸ் தடுப்புக்காக உலகின் முதல் தடுப்பூசியை வெளியிட்டுள்ள ரஷ்யாவின் கண்டுபிடிப்பு முற்றிலும் பொறுப்பற்ற, முட்டாள்தனமான செயல்" என்று உலக தொற்றுநோய் மருத்துவ நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

கொரோனா வைரஸ் தடுப்புக்காக உலகின் முதல் தடுப்பூசியை வெளியிட்டுள்ளதாக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் அறிவிப்பு வெளியிட்டார். தன் இரண்டு மகள்களில் ஒருவருக்குத் தடுப்பூசியைச் செலுத்தி, பரிசோதனை நடத்தப்பட்டது எனவும், புதிய தடுப்பூசி மிகவும் பாதுகாப்பானது என்றும் தெரி வித்தார். ஆனால் "கொவிட்19 நோய்க்கு எந்த நாடு முதலில் தடுப்பூசியைத் தயாரிக்கும் என்ற பந்தயத்தில் முதலாவது வருவதற்காக அவசர கதியில் தடுப்பூசியை வெளியிட்டுள்ளனர். இது முற்றிலும் பொறுப்பற்ற, முட்டாள்தனமான செயல்.

ரஷ்ய தொலைக்காட்சியில் பேசிய புடின், ``ஸ்புட்னிக் வி' (Sputnik V) என்று பெயரி டப்பட்டுள்ள தடுப்பூசியை பெருமளவில் உற்பத்தி செய்ய முடியும். இந்தத் தடுப்பூசி கொவிட்19 வைரஸுக்கு எதிரான வலுவான நோய் எதிர்ப்பு ஆற்றலை உருவாக்கும். மேலும், தேவையான அனைத்துப் பரிசோதனைகளை யும் கடந்துள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

பொதுமக்களுக்கு இது நற்செய்தியாக இருந்தாலும், உலகம் முழுவதுமுள்ள விஞ்ஞானிகள் இந்தத் தடுப்பூசி கொரோனாவுக்கு எதிராகத் திறம்படச் செயல்படும் என்பதை ஏற்க முடியாது என்றும் தெரிவித்துள்ளனர். ரஷ்யா, தடுப்பூசி பரிசோதனை குறித்த முழுத் தரவுகளையும் வெளியிடவில்லை. அப்படியிருக்கும்போது தடுப்பூசியின் செயல்திறன் குறித்த நம்பகத்தன்மை கேள்விக்குறியாகிறது என்றும் தெரிவிக்கின்றனர்.

மேலும் தடுப்பூசி மனிதப் பரிசோதனையின் (Human Trial) மூன்றாவது நிலையில் அதிக அளவிலான மக்கள்தொகைக்கு வழங்கி பரிசோதனை செய்ய வேண்டும். குறைந்தது 10,000 பேருக்காவது இந்தத் தடுப்பூசியை வழங்கி அதன் திறனைக் கண்டறிய வேண்டும். அதை இனிமேல்தான் ரஷ்யா நடத்தப் போகிறது. அந்தப் பரிசோதனை முடிவுக்குப் பிறகு தான் தடுப்பூசியின் திறன் குறித்த முடிவுக்கு வர முடியும். என்றும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 13.08.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.